முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 832

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.01.2022, சனிக்கிழமை

1. தர்மத்தின் காவலனே அரங்கா போற்றி
   தவசியாய் வாழுகின்ற தேசிகா போற்றி
   கர்மவினை போக்கி காத்தருள
   கலியுகத்தில் ஞானியாக வந்த குருராஜனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
   புகலுவேன் அரங்கனுக்கு ஆற்றல்பட பூவுலகில் ஞானஅறிவுரை ஆசி தன்னை
   வகைபட பிலவ சிலை திங்களில் உரைப்பேன்
   (பிலவ வருடம் மார்கழி மாதம் 24ம் நாள், 08.01.2022 சனிக்கிழமை)
   வரம்தந்து அரங்கனுள் யானிருக்க
3. இருக்கவே அரங்கன் கரம்பட
   இவ்வுலகத்தார் தீட்சை பெற்றால் போதும்
   கருத்தாக வேலவன் என்னாசி கிட்டுவதோடு
   கடைத்தேறும் மார்க்கமும் கண்டு தேறுவர் என்பேன்
4. தேறவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
   தெய்வபலம் தரும் உயர்ந்த ஞானி
   தடையற அரங்கன் தர்மவழிக்கு
   தரணியோர் தொடர்ந்து வருதல் காண
5. காணவே அரங்கன் தர்மத்தாலே
   கண்டுரைப்பேன் உலகம் மாற்றம் பெறும்
   ஞானவான் அரங்கன் கொள்கையாலே
   ஞானயுகமாற்றம் கலியுகம் தானாக காணும்
6. காணவே அரங்கனே எந்தன் அவதாரம்
   கருணைகொண்டு வந்தால் அரங்கன் வழி
   ஞானவான்களெனும் ஞானிகள் படைபெருகி
   ஞானயுகமாற்றம் அரங்கன் வழி சடுதி இனிதே நடந்தேறும்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–